பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட காங்கிரஸ்

திராவிடநாடு

மலர் 10. 30—12—51 இதழ் 26.

மலாய் 12 காசு] விலை அணா இரண்டு [இலங்கை 15 சதம்

திருவாங்கூர்—கொச்சியில் 35 இடங்களில் காங்கிரசுக்கு 3,72,439 காங்கிரசை எதிர்த்து 5,98,459 வாக்களித்துள்ளனர்.

காங்கிரசை எதிர்ப்போர் 62% காங்கிரசை ஆதரிப்போர் 38%

புள்ளி விவரம் தரும் புன்சிரிப்பு

திருவாங்கூர்—கொச்சி பகுதிகளில் நடந்துவரும் தேர்தல் முடிவுகள் தினந் தினம் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளிலிருந்து, போட்டியிட்ட 42 இடங்களில் காங்கிரசுக்கு 20 இடங்களையும், காங்கிரசை எதிர்த்து நின்றவர்கள் 22 இடங்களையும் பிடித்திருக்கிறார்கள்.

காங்கிரஸ், மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது என்பதற்கு, இந்தத் தேர்தல் முடிவே சாட்சியாகிறது.

தோல்வி, தோல்வி, பெருந்தோல்வி காங்கிரஸ் காண்பதெல்லாம் தோல்வி

காங்கிரஸ்கட்சி; இன்று நாட்டை யாள்கிறது.

அதுவும் தேர்தலில் கலந்து கொள்கிறது. ஆகவே அதற்கு எப்படியும் வசதிகள் பல பெறமுடியும்.

ஜனநாயகத்தின் அடிப்படையே தெரியாத பலரின் கையில் ஆட்சி சிக்கி விட்டதால், அவர்கள் விருப்பம்போல் சலுகைகள் செய்து கொள்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிற பணம், வேறு எவருக்கும் இருக்க முடியாது. அவ்வளவு பணத்தையும் செலவிட்டுத்தான் தேர்தலில் கலந்து கொள்கிறது.

அதற்கு இருக்கும் பிரச்சார வசதி வேறு எந்தகட்சிக்கும், எந்த தனி நபருக்கும் இருக்க முடியாது.

தன் பிரச்சார பலம் முழுவதும் இந்த நோக்கில் காங்கிரஸ் காட்டித் தான் போட்டியிடுகிறது. இழந்த செல்வாக்கை மீண்டும் பெற முழு மூச்சாக வேலை செய்கிறது.

மக்கள் அவர்கள் ஆட்சியில் அனுபவித்த துன்பங்களை மறந்து அவர்களுக்கே ஓட்டளிக்க வேண்டுமென்று, எவ்வளவு பிரச்சாரம் செய்ய வேண்டும்! அத்தனைக்கும், தன்னைத் தயாராக்கிக் கொண்டுதான், காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொள்கிறது.

திருவாங்கூர் — கொச்சி பகுதிகளில், காங்கிரசுக்கு நடந்த பிரசாரம்போல் வேறுயாருக்கும் நடைபெறவில்லை.

புயல் வேகத்தில் பிரச்சாரம் செய்தார்கள்.

புதுப் புதுத் திட்டங்களைக் காட்டி, பொதுமக்களின் புன்னகையை பெற்றுவிடலாம் என்று பிரச்சாரம் செய்தார்கள்.

தினந்தினம் புதுப்புதுப் பேச்சாளர்கள் பேசினார்கள்.

நேரு சென்றார் — காங்கிரசின் வெற்றிக்காக, சுற்றுப்பிரயாணம் நடத்தினர்.

காங்கிரசை எதிர்த்திடும் எந்தக் கட்சிக்கு அவ்வளவு பிரச்சாரவசதி கிடையாது. ஏற்படுத்திக் கொள்ளவும் முடியாது.

அப்படியிருந்தும், அங்கு நடந்த தேர்தல் முடிவுகள். மிகத் தெளிவாகத் தெரிவிக்கின்றன, காங்கிரஸ், இனி நாட்டுக்குத் தேவையில்லை மக்கள் முடிவு செய்து விட்டார்கள் என்பதை!

நமக்குச் சரிவர புள்ளி விவரங்கள் கிடைத்த 35 தொகுதிகளை வைத்துக் கொண்டு, மக்கள் மனவு நிலையை போடுவோம்.

35 தொகுதிகளிலும் தங்கள் வாக்குரிமைகளைத் தந்தவர்கள் 970898 பேர்கள். இவர்களில் காங்கிரசிற்கு ஓட்டளித்தவர்கள் 372439பேர்கள். காங்கிரசை எதிர்த்து ஓட்டளித்தவர்கள் 598459 பேர்கள்.

இந்தப் புள்ளி விவரம், காங்கிரஸ் தோழர்களுக்கு கண்ணை உறுத்தும்—ஆனால் மக்கள், 'கண்களிலே ஒத்திக் கொள்வார்கள்.

இந்தப் புள்ளிக் கணக்கு, புண்பட்ட மக்கள் உள்ளத்திற்கு ஒரு 'ஆறுதல்' வதங்கிப் போன அவர்கள் இதயத்திற்கு புதிய சக்தி!

காங்கிரஸ் தான் விதைத்ததை அறுக்கிறது, இப்பொழுது! மக்கள மத்தியில் வேதனையை, விதைத்தது—இன்று அது வேதனை அறுவடை செய்கிறது.

காங்கிரசை எதிர்த்தவர்கள் எண்ணிக்கையை பாருங்கள். ஆதரித்தவர்களின் தொகையையும் கூர்ந்து கவனியுங்கள்.

நூறுபேர்களில் காங்கிரசை ஆதரிப்பவர்கள் 38-பேர் — எதிர்ப்பவர்கள் 62.

68-பேர்கள் எதிர்ப்பைத் தாங்கிக் கொண்டு 38-பேர்களின் ஆதரவிலே எப்படி ஒருவன் வாழ முடியும்!

அதே கதைதான் காங்கிரசுக்கு! இனி அது வாழமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

மக்களின் நம்பிக்கையை காங்கிரஸ் இழந்து விட்டது என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது. இனியும் காங்கிரஸ் ஆள்வோம் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனம்.

கோஷம், மக்களுக்கு வழிகாட்டுகிறது. அதைப் பின்பற்றத் தயாராக இருக்கின்றன, பிற இடங்கள் எல்லாம்!

காங்கிரஸின் படுதோல்வியைப் படம்பிடித்துக் காட்டிவிட்டது, திருவாங்கூர், கொச்சி தேர்தல் முடிவுகள். அதுவேதான், இந்த தேர்தலில் காங்கிரஸின் முடிவு என்பதின் முன்னறிவிப்புதான் மேலே காட்டியுள்ள புள்ளிவிவரம்.

தி. மு. க. ஆதரவு பெற்ற அபேட்சகர்கள்

திராவிட முன்னேற்றக் கழக ஆதரவு பெற்ற அபேட்சகர் பட்டியலில் மேலும் சிலபேர் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது. அந்தத் தொகுதியிலுள்ள தோழர்கள் முயற்சி குன்றாது, பணியாற்றி வெற்றிபெற பாடுபடவேண்டுகிறோம். ஏனெனில் அவர்கள் வெற்றி—நம் வெற்றி—நம் இலட்சிய வெற்றி என்பதை நினைவில் நிறுத்துங்கள்! பணியாற்றுங்கள்!! வெற்றி நமதே!

சட்டசபை

சீர்காழி தொகுதி..................ரங்கநாத (முதலியார்)
வந்தவாசி ,,.......(ரிசர்வ்டு)...தசரதன்
தாராபுரம் ,,....................சேனாபதி
ஒட்டன்சத்திரம் ....லட்சுமிபதி (நாய்க்கர்)
அரியலூர் ,,....................முத்துசாமி (உடையார்)
ஓமலூர் ,.....................பி. ரத்தினசாமி.
ஸ்ரீரங்கம் ,,....................சிற்றம்பலம்
தூத்துக்குடி ,,....................கே. வி. கே. சாமி

பார்லிமெண்ட்

திருச்சி தொகுதி..........டாக்டர். இ. மதுரம்
சேலம் ,................எஸ். துரைசாமி (பிள்ளை)
தர்மபுரி ,,................என். சத்தியநாதப(பிள்ளை)
காஞ்சிபுரம் ,,................டாக்டர் கிருஷ்ணசாமி

உண்ண உணவு இல்லை, குடிக்க தண்ணீர் இல்லை

நாட்டைப் பஞ்சக் காடாக்கிவிட்டது ஆனாலும் காங்கிரஸ் ஓட்டுக்கு வருகிறது!

வெட்கம்! வெட்கம்!!

கடப்பா பகுதியில், சர்க்கார், கண்காணித்துப் பார்த்தார்கள், எங்கும் மக்கள் மழையில்லை, பஞ்சம் பஞ்சம் என்று பரிதவிப்பதைத் தான் கண்டார்கள். ஐயோ, உண்ண உணவில்லை, குடிக்கத் தண்ணீருக்கும் பஞ்சம் என்று கூவிடும் கோரக் காட்சியே தெரிந்தது. ரெவின்யூ போர்டு உறுப்பினர் எம். வி. சுப்பிரமணியம் மாவட்டம் முழுவதும் சுற்றிவந்தார். அவர் கண்ட காட்சி இதுதான், எங்கும், கஞ்சித் தொட்டிகள் வைக்கச் சொல்லுங்கள், குறைந்தவிலையில் தானியம் தரச் சொல்லுங்கள். நிலவரியைத் தள்ளச் சொல்லுங்கள் என்றார்கள்.

கடப்பாவில்மட்டுமல்ல, இந்தநிலை —சென்னை ராஜ்யம் முழுவதும் அங்கங்கே இருந்து சென்ற எம். எல். ஏ-க்கள் முன்னர் ஓட்டு கேட்க போனார்களே, அதைத்தவிர அப்புறம் போனதில்லையே! மந்திரிகளானவர்களும் மக்களை இப்பொழுதானே திரும்பிப் பார்க்கிறார்கள்! அவர்களுக்கு இந்தக் காட்சிகள் இப்பொழுதுதான் கண்ணில் படும். இத்தனைக் கோரக்காட்சிகளையும் ஏற்படுத்திவைத்துவிட்டு, எந்த முகத்துடன் வாக்குரிமையைக் கேட்கப் போகிறார்கள்? மக்களை எப்படி நிமிர்ந்து பார்க்கிறார்கள்? [illegible] காங்கிரசுக்கு ஓட்டுபோடு என்று கேட்கிறார்கள்! [illegible]

*

திராவிடநாடு

காஞ்சி] 30—12—51 [ஞாயிறு

புதிய நம்பிக்கை

★

பாலைவனத்திலே விடுதலை கீதம் கேட்கிறது! உரிமைத் தென்றல் வீசுகிறது! சுதந்திர நிலவு தோன்றி, உணர்ச்சி தண்ணொளி பரப்புகிறது!

பாலைவனம் என்றாலும், அதனை சுதந்திரம் பெற்ற தனி நாடெனப் பிரகடனப்படுத்திவிட்டார்கள்.

லிபியாவை, இனி விடுதலையடைந்த நாடென உலகுக்கு அறிவித்துவிட்டார்கள்.

இனி, லிபியா, விடுதலை பெற்ற உலக நாடுகளில் ஒன்றாகத் திகழும். சுதந்திரம் தரும் சுகத்திலே மிதக்கும்.

லிபியா தன்னாட்சி பெற்று தலை நிமிர்ந்து நடக்கமுடியும், இனி.

லிபியா, வட ஆப்ரிக்காவில் ஈஜிப்துக்கும், டூனிஷியாவிற்கும் இடையிலே உள்ள பிரதேசம்.

மத்தியதரைக் கடலை யொட்டியிருக்கிற நாடு இது.

இதில் டிரிபோலிடேனியா, ஸிராநெய்கா, பெஜான் ஆகிய மூன்று பகுதிகள் அடங்கும்.

பூகோள அமைப்புப்படி, லிபியா, பெரும் பகுதி பாலைவனம.

லிபியாவின் பரப்பை முதலில் பார்த்தால் மலைப்பாகத் தோன்றும்.

பாலைவனத்தின் பரப்பு எவ்வளவு இருந்தாலும், மக்களுக்கு அது பயன்பட வழியில்லை.

மக்கள் வாழக்கூடியபகுதி 17000 சதுர மைல்தான். அதாவது, தமிழ்நாட்டிலுள்ள மூன்று மாவட்டங்களின் பரப்பு! இதிலே வாழ்பவரின் தொகை 10 லட்சம் தான்.

பத்து லட்சம் மக்கள் வாழ்கிற லிபியா, இன்று சுதந்திர நாடாகி விட்டது.

பதினேழாயிரம் சதுரமைல்கள் கொண்ட இடமே மக்கள் வாழும் பகுதியாகக் கொண்ட லிபியா, விடுதலை பெற்ற நாடாகி விட்டது.

மத்தியதரைக்கடல் ஓரமாகஇருப்பதால் மட்டுமே, வாழும் வசதி பெற்ற லிபியா, இன்று தனிநாடாக தலைநிமிர்ந்து நிற்கிறது.

இனி சர்வதேச நாடுகளின் துணை கொண்டு, பெற்றுள்ள சுதந்திரத்தை பூரணமாக்கவும், உண்மையாக்கவும் பாடுபட வேண்டும். அந்த முயற்சியிலே, லிபியா தன் கவனத்தைத் திருப்பவேண்டும்.

லிபியா, துருக்கியின் ஆதிக்கத்தின்கீழ் அடங்கிக்கிடந்தது. துருக்கியதுரைத்தனம், ஆட்டியபடி ஆடும் பொம்மைபாக, லிபியா இருந்தது. பிறகு, இத்தாலியின் இரும்புப் பிடியிலே சிக்கி சீரழிந்தது.

பிறகு பிரிட்டிஷ் பெரும்படை லிபியாவில் புகுந்து, தன்வசமாக்கிக் கொண்டது.

ஆங்கிலரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தவுடன், அதனை நேச தேசங்களின் போர்த்தளமாக மாற்றினார்கள். சென்ற உலகப் போரில், அதனை நேச தேச போர்க் கேந்திரங்களில் ஒன்றாக ஆக்கியிருந்தார்கள்.

போர் முடிந்தது. லிபியா ஐக்கிய நாடுகள் சபையின்மேற்பார்வையின் கீழ்வந்தது. பிரிட்டிஷ் — பிரஞ்சு துரைத்தனம் அங்குநடந்துவந்தது.

ஐ. நா. சபை, லிபியா சுதந்திரம் பெறும் வகைகளையும், பிரிட்டிஷ்—பிரஞ்சு ஆட்சியை மேற்பார்வை செய்யவும், ஒரு கமிஷன் நியமித்தது. அந்தக கமிஷனின் துணையோடு, ஏற்படுத்தப்பட்ட அரசியல் நிர்ணயிப்புப்படி, லிபியா சுதந்திர நாடென அறிவிக்கப்பட்டுவிட்டது.

புதிய சுதந்திர லிபியா மகமத் ஸயித் இட்ரிஸ் என்ற யெனூஸி வகுப்பின் அமீரை மன்னராகக் கொண்டு இடங்கும்.

சுடு மணற்காடு, சுதந்திர நாடென அறிவிக்கப்பட்டு விட்டது.

பாலைவன பூமி, தனித்து பரிபாலனம் நடத்தப் போகிறது.

லிபியா சின்னஞ்சிறு நாடு—பரப்பு பெரிதாகக் காணப்படினும் அத்தனையும் பாலைவனம். அங்கு வாழ்வோரின் தொகை மிகவும் குறைவு. இதனை தனியாக, சுதந்திர நாடாக இயங்க முடியும் என்று கூறுகிறார்கள்.

லிபியாவின் சுதந்திரத்திற்காகஇந்தியா போராடிற்று என்று வேறு பெருமை பேசிக்கொள்கிறார்கள்!

லிபியா, தனி நாடாக வாழ்வது சரியென்று கூறிடும் வாயால்தான் நம் விடுதலைப் போராட்டத்தைக் கேலி பேசுகிறார்கள்.

பாலை வனத்திற்கு பரிந்து பேசுகிறார்கள்! ஆனால் பசுந்தரைக்குப் பகையாகிறார்கள்!

திராவிட நாடு, திராவிடருக்கே என நாம் முழங்கிடும் பொழுது, திராவிட நாடாம், சிறு சிறு கூறாக பாரதத்தைப்பிரித்திடலாமா, சிறிய நாடு எப்படித் தனித்து வாழ முடியும், என்று பேசுகின்றனர்.

திராவிட நாடு சிறிய நாடு—அவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள்!

ஆனால் லிபியா தனித்துவாழ இந்தியா போராடிற்று என்று மட் கூறுகிறார்கள்.

லிபியாவில் மக்கள் வாழும் பகுதி 17000 சதுர மைல். ஆனால் திராவிடத்தில் மக்கள் வாழும் வசதி நிறைந்த இடத்தின் பரப்பு 1,42000 சதுர மைல்.

அங்கு வாழ்வோர் பத்து லட்சம். நாமோ, ஆறரை கோடி மக்கள்.

அவர்களுக்குச் சுடுமணல் தான் சொந்தம் — நமக்கோ மண்ணைத் தள்ளினால் தங்கம் கிடைக்கும் பொன் பூமி இருக்கிறது.

மத்திய தரைக் கடலின் ஓரத்திலிருப்பதால் மகத்துவம் பெற்றது லிபியா. நம் திராவிடத்தின் மூன்று பக்கங்களிலுமே கடல் முத்தமிட்டபடியிருக்கின்றது. அதிலே முத்துக் குவியலை நினைப்பூட்டி, அலைபாய்கிறது.

லிபியா, துருக்கியர் பிடியிலிருந்து தப்பி, இத்தாலியர் கைக்கு மாறி, பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திற்கு வந்து, பிரெஞ்சுத் துரைத்தனத்திற்கும் இடங்கொடுத்தது, என்ற அடிமைப்பட்ட வகையை வரலாறு கூறுகிறது.

வந்தவர் வெல்லமுடியாத திரும்பினர்; வஞ்சகத்தாலே வாழ்விழந்தோம் நாம், என்று மட்டுமே, நம் வரலாறு கூறுகிறது.

ஆனாலும் திராவிடம் சிறு நாடாம்—பிரியக் கூடாதாம்!

142000 சதுரமைல் சிறிய பிரதேசமாம்—17000 சதுரமைல் பெரிய பிரதேசம் போலும்!

திராவிடத்தைக் காட்டிலும், பாலைவனப் பகுதியைச் சேர்த்தாலாவது லிபியா பெரியது.

ஆனால் திராவிடத்தைக் காட்டிலும், மிகவும் சின்னஞ்சிறு நாடுபல், ஐரோப்பாவிலே உள்ளன என்பதை அடிக்கடி எடுத்துக் காட்டி வருகிறோம்.

திராவிடத்தின் பரப்பையும் மற்ற நாடுகளின் பரப்பையும் வைத்து, அவைகளைக்காட்டிலும் எத்தனை மடங்கு திராவிடநாடு பெரியது என்பதை ஏற்கனவே பல முறை எடுத்துக் காட்டியதை மீண்டும் இங்கு தருகிறோம்.

2	இங்கிலாந்து
4	ஆஸ்திரியா
10	பெல்ஜியம்
2	செக்கோஸ்லேவேகியா
4	அயர்லாந்து
4	போர்ச்சுகால்
5	பல்கோரியா
3	கிரீஸ்
10	ஹாலந்து

கொண்டது திராவிடநாடு. இந்த நாட்டைச் சிறிய நாடென்று கூறிடுகின்றனர்.

லிபியா, சுதந்திர நாடாகி விட்டது. ஐ. நா. சபையில் உறுப்பினராவதற்கும் விண்ணப்பம் போட்டு விட்டது.

லிபியாவைப் பார்க்கிறோம். நம் லட்சியத்தில் மேலும் நம்பிக்கை பிறக்கிறது. உற்சாகம் பிறக்கிறது.

லிபியா, நமக்கு புதிய எழுச்சியைத் தருகிறது. திராவிடத்தை நாம் பெற்றே திருவோம் என்ற உணர்ச்சியை ஊட்டுகிறது. லிபியா, ஊக்கப் படுத்துகிறது, உற்சாகப் படுத்துகிறது—நமக்குப் புதிய நம்பிக்கையைத் தருகிறது!!

★

தேர்தல் திருவிளையாடல்கள்

நந்தனார் கீர்த்தனை நாட்டின் கீர்த்தனை

சற்றே விலகி நில்லாய் பிள்ளாய்
சந்நிதானம் மறைக்குது

பரமன் பாடிக்கொண்டே வந்தான். அவனுக்கு அதிக மகிழ்ச்சி வந்துவிட்டாலே அப்படித்தான். தன்னையுமறியாமல், பாட்டு பாடுவான், தாளம் போடுவான்.

'ஏதாவது கூத்துபார்த்தாயோ?' என்றேன். இல்லையென்பதை, தன் தலையசைப்பிலேயே தெரிவித்தான் நந்தனார் கீர்த்தனை படித்தாயே, என்று மீண்டும் கேட்டேன்.

இன்று ஊர் பூராவும் இதே பாட்டைத்தான் பாடுகிறார்கள் என்றான்.

எனக்கு ஆச்சர்யமாகப்பட்டது. ஊரே, ஒரே பாட்டைப் பாடுகிற தென்றால் எனக்குப் புரியவில்லை.

"பரமா—பாட்டை நிறுத்தி—விளக்கமாகச் சொல்லடா" என்றேன்.

"தேர்தல் நடக்கிறதே!" என்றான்.

"தேர்தல் நடக்கவில்லை, ஓடிவருகிறது" என்றேன், வழக்கமான கிண்டலோடு!

"அதிலேதான் இந்த பாட்டு" என்றான் மீண்டும்.

எனக்கு கோபம் கோபமாக வந்தது— அவனை உற்றுப் பார்த்தேன். எனக்கு கோபம் வந்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்டு, அவன் விளையாட்டை விடுத்து விஷயத்தைக் கூறினான்.

நந்தனார், ஆண்டவ தரிசனத்திற்கு போனபோது, ஆண்டவன் தெரியாமல், வழியிலே படுத்திருக்கும் ரிஷபத்தைப் பார்த்து ஆண்டவனை மறைத்துக் கொண்டிருப்பதைக் கூறி விலகிப் போகச் சொல்லப் பாடினாராம். இப்படி நந்தனாரின் கதையிலே நாம் கேட்டிருக்கிறோமல்லவா? அதைப் போல இன்று மாடு லைக் காட்டி, மாஜி மஞ்சள் பெட்டிகள் ஓட்டுகள் கேட்க வரும பொழுது, மக்கள் நடந்த ஆண்டுகளில், சுதந்திர சந்நிதானம் மறைத்திருந்தது போதும், விலகிக்கொள்ளுங்கள் என்று கேட்கிறார்கள் மக்கள் என்று எடுத்துக் கூறினான்.

அத்தோடு விடவில்லை அவன்— பழய பத்திரிகைகளை எடுத்து வைத்துக் கொண்டு, தேர்தல் திருவிழாச் செய்திகளை அடுக்காகக் காட்டத் தொடங்கி விட்டான்.

தரித்திர நாராயணர் ஜனத்தொகை பெருகுது!

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பிச்சைக்காரர்கள் ஏன் இருக்கப்போகிறார்கள்! பிறந்த நாட்டிலே, ஆளப் பிறந்தவர்கள் பிச்சையெடுக்க விடுவோமா என்று பேசினர், பல தேசீயத் தோழர்கள்.

பிச்சைக்காரர்கள் இருப்பதற்கே காரணம், வெள்ளையர்கள் ஆட்சி தான் என்று காரணங் காட்டினர்.

அந்நியர்கள் ஆட்சியினால்தான் இந்த அலங்கோலம என்றனர்.

நம்ம சர்க்கார் வந்துவிட்டால் எல்லாரும் இந்நாட்டு மன்னர்களாகி விடமாட்டார்களா என்று பேசினர்.

அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்—ஆண்டுகள் பலவாய் ஆண்டும் விட்டார்கள்.

தரித்திர நாராணர்கள் பெருகுகிறார்கள்! தினந்தினம் பிச்சையெடுப்போர் பெருகுகிறார்கள்!

மாட்டுப் பெட்டிக்கு நம்மை இப்பொழுதும் ஓட்டுப்போடச் சொல்கிறார்கள்.

ஒரு தோழர், மாட்டுப் பெட்டிக்கு ஓட்டு போடுங்கள், என்றவுடன் ஆத்திரம் அடைந்தார். அத்தோடும் விடவில்லை. சரமாரியாகப் பேசத் தொடங்கிவிட்டார்.

'முன்னே எங்கோ ஒருத்தன் பிச்சை யெடுத்தான். இவர்கள் ஆள வந்தவுடன் குடும்பம் குடும்பமாகப் பிச்சை யெடுக்கக் கிளம்பிவிட்டனர். இனியும் இவர்களுக்கே ஓட் போட்டால், பிச்சை யெடுக்க தெருத் தெருவாக, ஊர் ஊராக கிளம்பவேண்டியதுதான்!' என்று கூறினார், அவர் சேலத்தை விட்டு வந்த நெசவாளி.

காங்கிரஸ் பொதுக் கூட்டம்

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை எவ்வளவு கனஜோராக நடத்திவருகிறது, தெரியுமா, காங்கிரஸ்!

உதகையில், காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நடைபெறவில்லை! ஏன்? பேசவேண்டியவர் வரவில்லையோ, ஏற்பாடு செய்திருந்த 'மைக்' கெட்டுவிட்டதா, கூட்டம் நடைபெறாமல், மழை வந்ததா, புயல் அடித்ததா, பனி சொரிந்ததா என்றெல்லாம் கேட்டு விடாதீர்கள்! அப்படியொருவித அசம்பாவிதமும் நடந்துவிடவில்லை! ஆனாலும் கூட்டம்நடைபெறவில்லை.

காங்கிரஸ் கூட்டம் நடைபெறவில்லை. காரணம் மக்கள் யாரும் கேட்க வரவில்லை!

கூட்டம் கேட்கவே மக்கள் வரவில்லை, இவர்களுக்கு!

எனினும் ஓட்டு போடுவார்கள் அவர்கள் என நம்புகிறார்களே, ஐயோ, பாவம்!

ஜெய் ஹிந்த்! வந்தேமாதரம்!!

(6-ம் பக்கம் பார்க்க)

குஜராத்தியே, வெளியே போ

மறக்கமுடியாத மலையாள மதில்

நேரு கண்டார், நெருப்பு மலையானார்

கேரளத்திலும் திராவிடக் குரல்

குஜராத்தியே வெளியே போ என்ற பவனி வந்த ஜவஹர் கண்டாராம் இந்த வாசகத்தை — வாசகம் சுவற்றிலே எழுதப்பட்டிருந்ததாம். எங்கே—சென்னையிலதானே காணலாம் இந்தக் 'கண்றாவியை'' அங்குதானே இந்தத் திராவிடத்தான்கள் சுவற்றிலே இப்படியெல்லாம் 'கண்டதும் கடியதும்' கிறுக்கி வைத்திருக்கிறார்கள்—கட்டிடம் பாழாகிறது — என்றுதான் கூறத்தோன்றும் காங்கிரஸ் நண்பர்களுக்கு, ஆனால் குஜராத்தியே வெளியே போ!! என்று சுவற்றிலே எழுதப்பட்டிருந்ததை ஜவஹர் கண்டாரே, அது சென்னையில் அல்ல — திராவிட இயக்கம் புகாமலிருக்கும் ஆலப்புழையில் — திருவிதாங்கூர் சமஸ்தானத்தில். ஜவஹரின் கண்ணைக் கவரும் முறையிலே எழுதப்பட்டிருந்தது போலும்—இந்த எச்சரிக்கை. வடநாட்டு ஆதிக்க எதிர்ப்புணர்ச்சியை எடுத்துக் காட்டும் இந்த வாசகம், ஏதோ ஓரிடத்தில் மட்டும் இருந்திருந்தால், பொதுக்கூட்டத்திலே அதுபற்றி அவர் பேசவேண்டிய அளவுக்கு ஜவஹரின் கவனத்தை இழுத்திராது — பல இடங்களிலே அவர் இதைக் கண்டிருக்க வேண்டும்—கருத்துக்கு நிரம்ப வேலை ஏற்பட்டிருக்க வேண்டும் இந்த எச்சரிக்கையால். எனவேதான் ஜவஹர், ஆலப்புழையில் ஒரு சுவற்றிலே குஜராத்தியே வெளியே போ! என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டேன், என்று பொதுக்கூட்டத்திலே எடுத்துரைக்க நேரிட்டது.

இந்தச் சுவர் எழுத்தாளர், பல அலுவல்களுக்கிடையே சிக்கிச் சுழலும் ஜவஹருக்கு, தென்னாட்டிலே கிளம்பியுள்ள வெறுப்புணர்ச்சியை எடுத்துக் காட்டிவிட்டார், தென்னாட்டிலே இந்த முறை பவனியிலே கண்ட பல காட்சிகளை ஜவஹர் மறந்துபோகக் கூடும், ஆலப்புழை சுவற்றை மட்டும் மறக்க முடியாது!

அந்த எச்சரிக்கை அவர் மனதை மிகவும் குடைந்திருக்கிறது. எனவே அவர் பொதுக் கூட்டத்திலே அதைக் கண்டித்துப் பேசியதுடன், கோபத்தையும் வெளியிட்டார். "திருவாங்கூர்காரர்கள்தான் ஏராளமாக டில்லி ஆபீசுகளில் குவிந்திருக்கிறார்கள். இந்த நிலையில், திருவாங்கூர்க்காரர்களே, டில்லியை விட்டு வெளியே செல்லுங்கள் என்று ஒரு பலகை தொங்கவிடப்பட்டால், எவ்வளவு பரபரப்பு ஏற்படும்!'' என்று கேட்டிருக்கிறார்.

ஜவஹருக்குக் கோபம் பிறந்தது கண்டு மகிழ்கிறோம் — ஏனெனில் அவர், தென்னாட்டின் நிலையையும் நினைப்பையும் உணரும் வாய்ப்பு அதன் மூலம் கிடைத்திருக்கிறது.

சுவரில் இருந்ததை அவர் அலட்சியப்படுத்தவில்லை — எவனோ ஒரு காலியின் கிறுக்குத்தனம் என்று கூறிவிடவில்லை— கோபப்பட்டிருக்கிறார் — திருப்பித் தாக்கிப் பேசினால் தான் மனம் நிம்மதியாகும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது அவருக்கு. உடனே டில்லியில் இருப்பவர்கள் இதே முறையைக் கையாள முடியும் என்று கூறத்தோன்றிற்று — கூறியும்விட்டார். கோபம் மிக அதிகமாக இருந்தால்தான், சுவரிலே கண்ட வாசகத்துக்குப் பதில் காரசாரமாகக் கூறவேண்டி நேரிட்டது முதலமைச்சருக்கு!

ஓரளவுக்கு, வடநாட்டுத் தலைவர்கள் உணர்ந்துகொண்டுள்ளனர், தென்னாட்டிலே வளர்ந்துள்ள போக்கை. இங்குள்ள குலாபிமான ஏடுகள் எவ்வளவோ மறைத்தும்கூட, உண்மை மெள்ள மெள்ளத் தெரியத் தொடங்கியிருக்கிறது.

குஜராத்திகளை இங்கிருந்து போகச் சொல்கிறீர்களே, உங்களை அங்கிருந்து துரத்தினால் என்ன செய்வீர்கள்?—இந்தக் கருத்தைத்தான், சற்று இலைமறை காயாகக் கூறுகிறார் ஜவஹர், மட்டரக எதிர்ப்பாளர்கள், இதையே மமதையும் மதியீனமும் நெளியும் முறையிலே கூறுகின்றனர். கூறும் முறை எப்படி இருப்பினும் சரி, கூறப்படுவது கோபத்தால் என்பது விளங்குகிறது! கோபத்துக்குக் காரணம்; சுவையும் பயனும் பெறுகிறோம் இங்கு இருப்பதால், இதைப்பறித்துவிட முயற்சிக்கிறார்களே, என்ற எண்ணம் பிறப்பதுதான்

சொன்னவண்ணம் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம் —ஒரு நாட்டின் முதலமைச்சரே, ஜாடை காட்டும் முறையிலே, தூபமிடும் போக்கிலே இவ்விதம் பேசுகிறார் என்றால் சிலராவது, டில்லியில் இதுபோலப் போர்டு எழுதிக் கட்டவேண்டும் என்றுதானே எண்ணுவர் — செய்கிறார்கள் என்றால், தென்னாட்டுக்குப் பெரியதோர் நஷ்டமா, என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

குஜராத்தி, மார்வாடி, மூல்டானி சிந்தி, போன்ற வடநாட்டுக்காரர்கள் தென்னாட்டிலே இருப்பதற்கும், திருவாங்கூர் திருமயிலை ஆகிய இடத்தவர் டில்லியில் இருப்பதற்கும், வித்தியாசம் இருக்கிறது— பின்னவர்கள் பேனா பிடித்திடும் பெருமையாளர்—முன்னவர்களோ சுரண்டிடும் சுகபோகிகள்! வடநாட்டார், தென்னாட்டிலே முதலாளிகளாய், வியாபாரக் கோமான்களாய் இலாவாதேவிக்காரர்களாய், வாழ்கிறார்கள், வறுத்த கடலை வியாபாரத்திலே துவக்கி பெரிய பாங்க்முதலாளி அளவுக்கு வளருகிறார்கள்—வடநாட்டு வாணிபப் பொருள்களுக்கு இங்கு ஏஜண்டுகளாய் இருந்துகொண்டு, மார்க்கட் பிடிக்கிறார்கள் — தென்னாட்டு மூலப் பொருள்களை வடநாட்டுக்கு அனுப்பி வைக்கிறார்கள் — இந்தத் திருப்பணிமூலம், தென்னாட்டைத் தேயவைக்கிறார்கள், வடநாட்டைச் சீமையாக்குகிறார்கள். அவர்கள், மானேஜர், அக்கவுண்டெண்ட், கிளார்க் எனும் இடமடைத்தான்களாக இருந்துகொண்டு வருகிறார்கள்—சுரண்டிச் சுகம் பெறும் சுந்தரர்களாக அல்ல. இவர்கள் சில இலட்சரூபாய் சம்பளமாகப் பெறுகிறார்கள்—அதுவும் வடநாட்டார் மட்டும் கட்டும் வரிப்பணத்திலிருந்து அல்ல, தென்னாட்டார் கொட்டி அழும் வரிப்பணத்திலிருந்தும்தான். எனவே அவர்களால் வடநாட்டு வளம் கெடுவதில்லை, வியாபாரத்திலே அவர்கள் தலையிடுவதில்லை; இலாபவேட்டையில் ஈடுபடுவதில்லை. அவர்கள் வடநாட்டுக்குச் சுமையல்ல. ஆலப்புழைக்காரர் எழுதி எச்சரித்தாரே குஜராத்திகளைப்பற்றி, அவர்களின் முறை, தென்னாட்டை இலாபவேட்டைக்காடு ஆக்குவது. எனவேதான், குஜராத்திகளே! வெளியே செல்க! என்று எச்சரித்தார்கள். நாங்களும் செய்வோம் இதுபோல, என்று மிரட்டுகிறார்கள் — தாராளமாக — அதனால் இங்கு ஒரு குறையும் வந்துவிடாது. வடநாட்டுச் சுரண்டலை ஒழித்துவிட்டால், இங்கு வளரும் தொழில் அலுவல்களில், இதுபோது டில்லியிலே வேலைபார்க்கும் தென்னாட்டார், நிம்மதியாகப் பிழைக்க முடியும், பெண்டுபிள்ளைகளுடன் கொஞ்சிக் குலவியபடி. தோட்டத்திலே ஆடு நுழைவதற்கும், புறக்கடைப்பக்கம் புலி வருவதற்கும், வித்தியாசமில்லையா! இதை அறிந்துதான் ஆலப்புழையிலே அருமையான எச்சரிக்கையை, ஜவஹர் காணச் செய்திருக்கின்றனர்.

❁

உறுப்பினர்களாகுங்கள்

திராவிடமெங்குமிருந்தும், கடிதங்கள் வந்து குவிகின்றன! உறுப்பினராக இங்கு ஆயிரம் பேர் ஆவலோடு இருக்கிறோம், எங்களூரில் பத்தாயிரம் சேர்த்துக் காட்டுகிறோம், பாருங்களேன், உறுப்பினர் சேர்த்திட நாங்கள் நால்வர் ஆறுநாட்கள் எங்கள் வட்ட சிற்றூர்களில் சுற்றுப் பிரயாணம் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம், ஆகவே உடனே ரசீது புத்தகங்கள் அனுப்புங்கள், அவசரம் அவசியம் என்று எழுதிக் கொண்டேயிருக்கிறார்கள்! நம் பதில் கிடைப்பதற்கு முன்னாலே, மீண்டும் நினைவூட்டும் தந்திகள் பறக்கின்றன!

தேர்தல் வேகத்தின் உச்சநிலையை இப்பொழுது ஊரார் உணருகிற நேரம் — இந்த நேரத்தில உறுப்பினர் சேர்க்கும் வேலையை நாம் தொடங்கிட வேண்டியிருக்கிறது.

தேர்தலில் நமக்கு வேலையும்— அக்கறையும் ஏற்பட்டு விட்டன! ஏனெனில் ஒப்பந்தபத்திரத்தில் கையெழுத்திட்டு, நமது ஆதரவு பெற்ற அபேட்சகர்கள் வெற்றி பெறச் செய்ய நாம் உழைக்கவேண்டும்! உற்சாகத்தோடு பணியாற்ற வேண்டும்!

ஆகவே உறுப்பினராகச் சேர விழையும் தோழர்கள், உறுப்பினர் கட்டணம் எட்டணாவையும், தலைமை நிலையத்திற்கு அனுப்பி, அத்துடன் அவரின் பெயர், பால், தொழில், வயது, சிற்றூர், வட்டம் மாவட்டம், முழு முகவரி ஆகிய விவரங்களையும் தந்தால் உடன் ரசீது அவருக்கு கிடைக்கும். அங்கங்கேயுள்ள கிளைக்கழகத்தின் பணியாற்றும் அலுவலாளர்கள் அவரவர் ஊர்களில், உறுப்பினராக சேர விழைவோர்களிடமிருந்து மொத்தமாக வசூலித்து அனுப்பலாம். அது, இன்னும் எளிதாக இருக்கும்.

முறைப்படி, சிற்றூர், வட்ட, மாவட்டக் கழகங்கள் அமைந்துவிட்ட பிறகு, அதற்குச் சேர வேண்டிய தொகைகள் பிரித்து அனுப்பப்படும்.

வரும் பொங்கல் வாரத்தில் ஆயிரக்கணக்கான மணியார்டர்கள், தலைமைநிலையத்திற்கு விரைந்துவரவேண்டும்! பொங்கல் வாரம், உறுப்பினர் சேர்க்கும் வாரமாகத் திகழவேண்டும்!

A PLEA FOR UNDERSTANDING

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியோர் வாயடைத்திடச் செய்கிறது இந்த ஆங்கில ஏடு.

நம்மைப் பற்றி இருட்டடைப்பு செய்வதே, தங்கள் இலட்சியம் என்று கிடந்த பல ஏடுகள் இப்பொழுது வாய்திறந்திடுகின்றன. தி. மு. க. மத்திய நிலையம், இந்த எழிலேட்டை, இந்திய உபகண்டம் முழுவதும் உள்ள பத்திரிகாசிரியர்கள், குறிப்பிடத்தக்க அரசியல் தலைவர்கள் எல்லோருக்கும் அனுப்பியிருக்கிறது. தி. மு. க. வின் சொல்லின் செல்வர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், மற்றும் பலரும் தங்கள் வசமே நிறைய பிரதிகள் வைத்துள்ளனர். வேண்டுவோர் அவர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம். இந்த ஏடு நம் இயக்கத்தின் முதல் தூதுவனாகச் சென்றுள்ளது.

கன்னடப் பத்திரிகாசிரியர்கள், இந்த ஏட்டின் பிரதிகள் இன்னும் தேவையென்று எழுதுகிறார்கள்! மலையாளத் தோழர்களுக்கு தி. மு. க. வின் அடிப்படை உண்மைகளை இந்த ஏடு எடுத்துச்சொல்லி வருகிறது!

இந்த ஏட்டின் முதல்பதிப்பு முடியுந்தறுவாயிலிருக்கிறது. வேண்டுவோர் உடன் எழுதிப் பெறுங்கள்.

விலை எட்டணா

குறிப்பு:- தனிப்பிரதி வேண்டுவோர் 9-அணா தபால் தலைகள் அனுப்புக. முன்பணம் அனுப்புவோருக்கே புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படும். V. P. P. யில் புத்தகங்கள் அனுப்ப இயலாது.

அடுத்த ஆங்கில வெளியீடு சி. என். ஏ. தீட்டியது. விரைவில் வெளிவரும்.

விவரங்கட்கு:

வான்கார்ட் பப்ளிஷிங் ஹவுஸ்

'திராவிடநாடு' நிலையம், காஞ்சிபுரம்.

வடநாடு படையெடுத்துவிட்டது

திராவிடருக்கு பிரதிநிதி கோயங்காவாம்!

கல்கத்தாவில் காமராஜர் நிற்கமுடியுமா?

மணிலாக் கொட்டைத் தொழிலை பறித்திட வடநாட்டு சதித்திட்டம்

காங்கிரஸ் கண்ணியர்களே

சிந்தியுங்கள்—சிந்துங்கள் கண்ணீர்

—X—

வடநாட்டு முதலாளித்துவத்திற்கு ஆணவமும், துணிவும் அதிகம் வளர்ந்துவிட்டது என்பதற்கு சரியான அத்தாட்சி கிடைத்துவிட்டது.

வடநாட்டு முதலாளித்துவ ஏகாதிபத்தியம், துணிவும், ஆணவங்கொண்டு மட்டுமல்ல, தெளிவோடு திட்டம் போட்டும் வேலை செய்கிறது என்பதைக் காட்டிவிட்டது.

தென்னாட்டை எப்படியும் தம் பிடியிலேயே வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் நமக்குத் தெரிந்துவிட்டது! அதற்குரிய காரணங்களும் புரிந்துவிட்டன!

தென்னிந்தியாவை விட்டுவிட அவர்களுக்கு மனம் வராது. நிலைமையும் அந்த நப்பாசை கொள்ளாமல் இருக்கச் செய்ய முடியாது.

தென்னிந்தியாவில் முக்கிய மூலப்பொருள்கள் எல்லாம் கிடைக்கின்றன.

இரும்பு, நிலக்கரி, மாங்கனிஸ், அப்ரகம், உரோனியம், பலப்பல உண்டு இங்கு.

தேயிலை, காபி இப்படி அந்நியர் விரும்பிடும் பொருள்கள் இருக்கின்றன.

இவை சாதாரண மதிப்புடையன அல்ல! டாலர்கள் கோடி கோடியாகத் தரக் கூடியன!!

இவைகளைவிட மனம் வருமா, வடநாட்டு வணிக வேந்தர்களுக்கு—அமெரிக்க முதலாளித்துவத்துடன் பேரம் பேசி. கூட்டு முன்னணி அமைத்துக்கொண்டு, கொள்ளை லாபம் குவிக்கும் வடநாட்டு முதலாளித்துவம் எப்படியிருக்க முடியும்!

சுட்டுவிரல் அசைந்தபடி ஆட காங்கிரஸ் ஆட்சி! தோள் மீது கரம் போட்டு தோழமை கொண்டாட அமெரிக்க டாலர் ஏகாதிபத்தியம்! இந்த நிலையில் தென்னாட்டைத் தம் பிடியில் வைத்துக்கொள்ள அவர்கள் பகீரத பிரயத்தினங்கள் படுகிறார்கள் என்பதைக் காணும் பொழுது, நமக்கு ஆத்திரமும் வரும். சிரிப்பும் சேர்ந்து வரும். ஏன்? வடவரின் வஞ்சகம் கண்டு ஆத்திரம் பிறந்தாலும், அதற்கு, தென்னாட்டார் இடங்கொடுக்கிற அளவு ஏமாளிகளாக இப்பொழுதில்லை. விழித்துக் கொண்டார்கள் என்பதை அவர்கள் உணரவில்லையே என்பதை எண்ணும் பொழுது சிரிப்பு தானே வருகிறது.

வடநாட்டு முதலாளிகளின் புன்னகைக்கு மண்டியிட்டுக் கிடக்கிறது காங்கிரஸ் ஆகவே அதனை போர்வையாகக் கொண்டு தென்னாட்டைப் படையெடுக்கிறது, வடநாட்டு ஏகாதிபத்தியம்! ஆகவேதான் நாம் விழிப்புடனிருக்க வேண்டும்!

வடநாட்டுப் படையெடுப்பு தொடங்கியிருக்கிறது — அதன் ஆரம்பம் தென்னாட்டில்!

தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தொகுதியில். டெல்லி பார்லிமெண்டுக்கு தோழர் கோயங்கா நிற்கிறார்.

தென்னாட்டாருக்குப் பிரதிநிதியாக நிற்கிறார் வடநாட்டார் — நிற்கிற துணிவு வந்திருக்கிறது! அந்தத் துணிவைத் தந்தது, காங்கிரஸ்.

திராவிடத்திலே, பனியா, நிற்க முடிகிறது! 'உங்கள் பிரதிநிதி நான்' என்று சொல்லிக்கொண்டு உலவ முடிகிறது!

கோயங்கா யார் தெரியுமா? பத்திரிகைத் தொழிலைக் கைப்பற்றி, அதன்மூலம், திராவிடத்தின் செல்வத்தைச் சுரண்டிடும் ஒரு வடநாட்டு முதலாளி.

தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளின் உரிமையாளர். அவரை தென்னாட்டில், திராவிடர்களின் பிரதிநிதியாக நிற்கிற அளவு தைரியந் தந்திருக்கிறது, காங்கிரஸ்.

கோயங்காவுக்கு வந்த தைரியத்தைவிட, காங்கிரசுக்கு வந்துள்ள துணிவைத்தான் பொதுமக்கள் கவனிக்கிறார்கள்.

தென்னாட்டிற்கு நேரு விஜயம் காரணத்தோடுதான்! கோளத்தில் காங்கிரஸ் ராஷ்டிரபதியின் பிரசங்க மாரி! அவசியத்தோடு, அவசரத்தோடு செய்யப்படுகிற காரியம் அது!

வடநாட்டு முதலாளிகள், தென்னாட்டை, இந்தத் தடவையும் அடக்கிவைத்திருந்தால்தான், தாங்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள அமெரிக்க முதலாளித்துவ முகாமிலே தலை நிமிர்ந்து நடக்கமுடியும். அதற்காகத்தான் கண்ணுங் கருத்துமாக வேலை செய்து வருகிறது.

கோயங்கா, தமிழ்நாட்டில், தமிழர்களின் பிரதிநிதியாக, டெல்லிக்குச் செல்ல, நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார், காங்கிரஸ் அபேட்சகராக!

தென்னார்க்காடு மாவட்டத்திலே வாழ்வோரை அவமானப்படுத்திவிட்டது. அந்தப் பகுதிக்கு, காங்கிரஸ் சார்பில் செல்ல, ஒரு தமிழனுக்கும் யோக்கியதை இல்லை, அங்குள்ளோர் பேசும் மொழியறியாத, அங்குள்ளோரின் சுக துக்கங்களைப் பற்றிய கவலையில்லாத ஒரு பனியாவை நிறுத்தி, அவருக்கே தகுதியுண்டென்று கூறும் காங்கிரஸ் இன்னமும் அங்கே பிரசாரம் செய்துகொண்டிருக்கிறது.

காங்கிரஸ் ஏதோ நமக்கு சாதித்துவிடும் என்று நம்பிக்கை கொண்டு ஓரிருவர் இன்னமும் காங்கிரசில் ஒட்டிக்கொண்டிருப்பார்களானால், அவர்களைக் கேட்கிறோம், இந்த அவமானத்தைச் செய்துவிட்டு காங்கிரஸ் இனியும் அங்கு உலவலாமா, உலவவிடலாமா என்று கேட்கிறோம்.

இதிலே இன்னும் ஒரு பெரிய சதி நடந்திருக்கிறது. அதையும் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டு, மூன்று இடங்களில் அவர் பெயர் அடிபட்டும், ஏன் அவர் தென்னார்க்காடு மாவட்டத்தைத் தெரிந்தெடுத்தார் தெரியுமா? அங்கே சூழ்ச்சியின் கரு மறைந்திருக்கிறது.

வளர்ச்சி பெறும் தொழில்கள் எதையும் வட நாட்டிலேயே தொடங்கவேண்டும் என்று திட்டமிட்டே வேலை செய்யும் வடநாட்டு முதலாளித்துவம் அந்த மாவட்டத்திலே ஏராளமாகப் பயிராகும் மணிலாப் பயிரையும் தங்கள்வசமே கொண்டுவந்து அதன்மூலம் பல தொழில்களை உண்டாக்கமுடியும் என்று முடிவுசெய்து, அதன்படி, கோயங்கா உருவில் தனது முற்றுகையைத் தொடங்கியிருக்கிறது.

காங்கிரசில் இன்னமும் எஞ்சியுள்ள கண்ணியவான்களைக் கேட்கிறோம்—நெஞ்சில் கைவைத்துக் கூறட்டும்.

குஜராத்திலே, ஒரு தொகுதியில் குமாரசாமி ராஜா நிற்கமுடியுமா? கல்கத்தாவிலே காமராஜர் நிற்கமுடியுமா? டெல்லியிலே பக்தவத்சலம் போட்டியிடமுடியுமா? ஆனால் திண்டிவனத்திலே கோயங்கா நிற்க முடிகிறது! வெட்கந் துளியாவது இருந்திருந்தால், இதனை அனுமதிப்பார்களா?

கோயங்கா, திராவிடரின் பிரதிநிதியாம். காங்கிரஸ் பிரசாரம் வேறும் தினம், தினம்! வெட்கம், வெட்கம், வெட்கம்!!

அந்த வடநாட்டுப் பண மூட்டையை எதிர்த்துத் தோழர் திருக்குறள் வீ. முனுசாமி நிற்கிறார். அவர் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவோடு நிற்கிறார். திராவிடத் தனியரசு போர்முரசு கொட்டுவேன் என்று கூறிவிட்டு நிற்கிறார். குறளைக் கேடயமாகக் கொண்டு, திராவிட இபக்க வாளேந்தி, டெல்லி நோக்கி செல்வேன், வாகை சூடி வருவேன் என்று உறுதிமொழி தந்துவிட்டு நிற்கிறார்!

பணம் ஒரு பக்கத்தில்! குறள் மணம் வேறொரு பக்கத்தில்!

திராவிடத் தோழர்களே, வடநாட்டு ஏகாதிபத்தியம் விரண்டோடச் செய்யவேண்டும் வீரத் திராவிடர்கள் விழித்துக்கொண்டனர் என்பதைக் காட்டவேண்டும்.

மாட்டுப் பெட்டியில் ஓட்டு போடுவோர், திராவிடத்தை வடநாட்டிற்கு அடகு வைக்கின்றனர் என்று அர்த்தம்—மாட்டுப் பெட்டியில் ஓட்டுப் போடுவோர், திராவிடர்களை, வடநாட்டு முதலாளிக்குக் காட்டிக் கொடுக்கிறார்கள் என்று அர்த்தம்—அதனைக் கவனப்படுத்திக்கொள்ளுங்கள். வடநாட்டு வல்லரசின் வீண் கனவை கலைத்து விடவேண்டும். ஆகவே, எதிர்த்து நிற்கும் தோழர் முனுசாமியை நாம் தேர்ந்தெடுக்கவேண்டும்.

திண்டிவனம், திராவிடத்தில் நாம் திரட்டியிருக்கும் சக்தியின் பலப் பரிட்சை! வடநாடு தொடுத்த போரிலே வெற்றி மாலை யணிய வேண்டும் நாம்.

தோழர்களே!

மாநாட்டில், பலர், நிகழ்ச்சிகளை, முக்கிய தோழர்களைப் புகைப்படம் எடுத்திருக்கிறார்கள் அவர்களெல்லாம் அன்பு கூர்ந்து, மாநில மாநாட்டுச் செய்திகளைத் தாங்கி வரும் 'வெற்றி'—என்ற தனிப் புத்தகத்தில் இடம்பெறச் செய்ய, காஞ்சிபுரம் முகவரிக்கு புகைப்படங்களை அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர்

பொங்கல் மலர்

வழக்கம்போல் 'திராவிடநாடு' பொங்கல் மலர் வெளிவருகிறது.

அரிய கட்டுரைகள், அழகான கற்பனைச் சித்திரங்கள், சிறந்த சிந்தனை ஓவியங்கள் நிறைந்துள்ளதாய் இருக்கும்.

மூவர்ண முகப்பு மலருக்கு அழகு சேர்க்கும்.

பிற விவரங்கள் அடுத்த இதழில்

ஆசிரியர்.

'வெற்றி' விரைவில் கிடைக்கும்

—✲—

சென்னையில் நடந்த மாநில மாநாட்டுகளை எடுத்துக் காட்டும் 'வெற்றி' என்ற சிறந்த புத்தகம் மிக விரைவில் வெளியிடப்படும்.

மாநில மாநாட்டின் தலைவர், திறப்பாளர், வரவேற்பாளர், ஓவியக் காட்சி திறப்பாளர் ஆகியோரின் அரிய சொற்பொழிவுகள் அதில் இடம் பெறும்.

சிறப்புச் சொற்பொழிவுகள் மிக அழகாக தொகுக்கப்படுகிறது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விளக்கங்கள் தரப்படும்.

மாநாட்டின் நிகழ்ச்சிகளின் போது எடுக்கப்பட்ட புகைப் படங்கள் ஏராளம், அந்த ஏட்டில்.

தி. மு. கழகத் தோழர்கள் கரங்களில் தவழவேண்டிய ஏடு.

தோழர்களே, வரும் நாளை எதிர்பார்த்திருங்கள்!

காத்திருங்கள்—'வெற்றி' கிடைக்கும்! விருந்து அருந்தலாம்!!

அரிசியை அடியோடு நிறுத்திவிட்டார்கள்

மத்திய பிரதேசமும், ஒரிஸாவும் கைவிரித்துவிட்டன

பஜனை பாடுகிறார் முன்ஷி உபதேசம் செய்கிறார் திருமல்ராவ்

மாட்டைக் காட்டி மயக்குகிறார்கள்! விவசாயிகள் விழித்துக்கொண்டனர்

பாதுத் தேர்தலின் வேகம் முடியவில்லை.

ல இடங்களில் தேர்தல்கள் ந்து முடிவுகள் வந்துகொண்டே க்கின்றன.

தமிழகத்தில் தேர்தல் தடபுடல் நிமிடத்திற்கு நிமிடம் விரிவா கொண்டே போகின்றன.

மாட்டுப் பெட்டிக்காரர்கள் ஆரப் ட்டந்தான் அதிகமாக இருக் து.

காளை மாட்டு ஊர்வலம் காலையில், ரிலே பிரச்சாரம் மாலையில்! று கட்டை வண்டியிலிருந்து, ருக்குத் தாவி கனவேகமாகப் ச்சாரம் செய்கிறார்கள்.

காங்கிரஸ் சாதித்தவை என்று, தமோதா கட்டுக் கதைகள் வேறு சிட்டு வைத்துக்கொண்டு அலை ர்கள்.

மத்துவை யொழித்தோம், ஆகவே ட்டுப் பெட்டியில் ஓட்டு போடு, கிறார்கள் ஒரு இடத்தில்.

ஜமீனை ஒழித்தோம், எனவே, கள் ஓட்டு மாட்டுப் பெட் கே, ஜெய் ஹிந்த், வந்தேமாத என்று அவர்களே கூவுகிறார் இன்னுஞ் சில சமயங்களில்.

கோயிலைத் திறந்தோம், மறந்து வேண்டாம், உங்கள் ஓட்டுகளை களுக்கே போடுங்கள் என்கிறார் வேறு சில சந்தர்ப்பங்களில்.

இப்படி, அவர்கள் சாதித்தாக ப்பல சொல்லித்தான் பார்க் ர்கள்.

ஆனால் மக்கள் மத்தியில் சென்று டால், அவர்கள் திரு திருவென க்கத்தான் வேண்டியிருக்கிறது.

அவர்கள் எதையும் கேட்ப லை. ஒன்றே ஒன்று—அதுதான் . அந்தப் பசிப்பிணி போக்க, ந்த மாட்டுப் பெட்டி என்ன செய் என்கிறார்கள். இவர்கள் என்ன லவார்கள்?

ஆறு அவுன்ஸ் கொடுக்கும் அச சூரத்தனத்தைச் சொல்வார் அதையும் கொடுக்க, அடிக் டெல்லியிடம் கெஞ்சிடும் பரி பத்தைச் சொல்வார்களா?

அந்த ஆறு அவுன்சுகளுக்கும் ப்பொழுது ஆபத்து வந்து விட் து.

தேர்தல் வருகிறது. காங்கிரஸ் க்காரின் கோணல்கள் மிக வேக க வெளியாகின்றன. அதுவும் களின் நன்மைக்குத் தான்—இது ரை தூங்கியவர்கள்கூட விழித் க் கொண்டு மாட்டுப் பெட்டியில் ட்டு போட்டால், இன்னும் எவ் ளவு அவதிக்கு ஆளாவார்கள் என் தை உணர்ந்து கொள்வார்கள்.

நல்ல சமயத்தில் தான், இத்த கய நிகழ்ச்சிகளும் நடக்கின்றன.

மத்திய சர்க்காரின் கொடுமைக்கு லையில்லை யென்பதை, இந்த கழ்ச்சி நன்றாக வெளிப்படுத்துப்.

சென்னை சர்க்காருக்கு அளித்து வந்த உணவுப் பொருள்களின் அள வைத் திடீரென மத்திய சர்க்கார் குறைத்துவிட்டது.

காரணம் ஏதும் காட்டவில்லை. ஆனாலும் குறைத்துவிட்டது.

இந்த மாதத்திற்கு வரவேண்டிய 25,000 டன் அரிசியும், சென்ற மாத பாக்கி 8000 டன் அரிசியும் இன்னும் வரவில்லை.

இந்த ஆண்டிற்காக ஒதுக்கப்பட் டது 2,00,000. ஆனால் இதுவரை 167000 டன் மட்டுமே வந்துசேர்ந் திருக்கிறது. மிகுதி இன்னமும் வந்து சேருமோ என்ற பயமும் அதிகமாக இருக்கிறது.

இந்த மாதத்திற்காக, ஒரிஸாவில் 10,000 டன்னும், மத்திய பிரதே சத்தில் 10,000 டன்னும் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டதாக அறிவிக் கப்பட்டிருந்தது. சென்னை சர்க்கார் குறைந்தது 20,000 டனாவது கிடைக்குமென்று ஆவலோடு இருந் தது.

ஆனால், திடீரென்று மத்திய பிர தேசத்திலிருந்து 2,000 டன்னுக்கு மேல் அனுப்ப இயலாது என்று அறிவிப்பு கிடைத்தது. அதை யொட்டி மத்திய சர்க்கார், மத்திய பிரதேசத்திலிருந்து வரும் 2000 டன் ஒருகவே குறைத்துவிட்டதா கவே உத்திரவு அனுப்பிவிட்டது.

மத்திய பிரதேசம்தான் அப்படி யென்றால், ஒரிஸாவின் கதையும் அதேதான்—அதைவிடப் பயங்கர மானதுகூட! அந்த அரிசியைக் கொண்டுவரவாகன ஏற்பாடு நடந்து கொண்டிருக்கும்பொழுதே, ஒரிஸா வில் இப்பொழுது அரிசி இல்லை யென்ற தகவல் கிடைத்துள்ளது.

ஆகவே, இப்பொழுது கைவசம் உள்ள அரிசியைக்கொண்டே காரி யத்தை நடத்தவேண்டும்!

காங்கிரஸ் ஆட்சியில் நாம் இருப் பதால் ஏற்படும் இன்னல்களுக்கு, இதைவிட என்ன சாட்சிவேண்டும்?

சென்னைக்கு வந்த உணவு உதவி மந்திரி திருமல்ராவ், நிலைமையை விசாரித்தார். அனுதாபத்தோடு பேசினார். அவசரமாக பங்களூருக்கு சென்றுவிட்டார்.

அந்நிய நாடுகளிலிருந்து அரிசி வரவழைக்க அசகாய சூரத்தனங்கள் எல்லாம் செய்கிறார்களாம் அவர்கள்.

அவர்கள் பிரதிநிதி பாங்காங்குக் குப் போயிருக்கிறாராம். அவர்களு டன் பேசி அரிசி வாங்கிவரச் சென் றுள்ளாராம். ஆனாலும் சீன அரி சியை அதிகம் எதிர் பார்க்கக் கூடா தாம். பர்மாவிலிருந்தும், மற்றும் ஆசிய நாடுகளிலிருந்தும் அரிசியைக் கொண்டுவர அங்குள்ள அரசியல் நிலை தடுக்கிறதாம்! அவர் திருவாய் மலர்ந்தவிட்டுப் போய்விட்டார்.

நாட்டின் உணவு நெருக்கடியை நாடாளும்மந்திரிகள் இப்படி அலட் சியமாக் கருதிக்கொண்டு ஆறுதல் மொழி பேசிவிட்டுப் போகிறார்கள்.

அதன் உண்மை உருவம் இன்ன மும் தெரியவில்லை. தெரிவிக்கும் சந் தர்ப்பம், இவர்கள் முடிதுறப்பதற் குள் ஏற்படுகிறதோ, இல்லையோ என்ற சந்தேகத்தில்தான் மக்கள் இருக்கிறார்கள். ஆனால் நாடாள் வோரோ, நாம் தப்பித்துக் கொள் வோம் என்ற தைரியத்தில்தான் நடமாடுகிறார்கள்என்று தெரிகிறது.

நாட்டின் உணவு மந்திரியோ. இது பற்றி அக்கரை யேதுமின்றி, உபதேசம் புரிவதிலேயே, தம் காலத்தைக் கழிக்கிறார்.

கனம் முன்ஷி அவர்கள், இந்தியா வின் இன்றைய பிரச்சினை உணவு தான்—அதனைத் தீர்க்கும் அரு மருந்து சுயதேவைதான், என்று பழையபாடலை, சுதி கெடாமல், பாடுகிறார்.

இவர்கள் ஆண்ட காலத்தில், நிர் வகிக்கவே முடியாமல் போன இலாகா, உணவு இலாகா. ஊழல் களும், குழப்பங்களும் நிறைந்த இலாகாவும் அதுதான்.

ஆனால், அவர்கள் பெட்டிக்குத் தெரிந்தெடுத்திருக்கும் சின்னம் உழவு மாடுகள்! உழவு மாடுகளைக் காட்டி, ஊர்மக்களை ஏமாற்ற நினைக் கிறார்கள். எனினும், ஊரார் அட் டையைக் காட்டி, அள்வரிசி வாங்கு வதை மறந்திருக்க மாட்டார்கள்.

உழவுக்கும், தொழிலுக்கும் வந் தனை செய்வோம், வீணில் உண்டு கொழுத்திருப்போரை நிந்தனை செய்வோம் என்று பாடிப்பாடி, ஏழை விவசாயிகளின் இதயத்திலே இடம் பிடித்து, பிறகு தான் ஆட் சிக்கு வந்தனர்.

வந்த பிறகு விவசாயம் சீர் குலைந்தது, விளைவு குறைந்தது, பஞ் சம் பரவிடத் தொடங்கிற்று!

பஞ்சத்தைக் கொண்டுவந்த இவர்கள், இன்று காளைகளைக் காட்டி, மக்கள் கண்களை மறைக்கப் பார்க்கிறார்கள்.

அதனால்தான், தேர்தல் வரும் நேரமாகப் பார்த்து, அரிசியைக் குறைத்து, மக்களை அவதிப்படுத்து கிறார்கள். அப்பொழுதானே மாட்டுப் பெட்டியைக் கண்டாலே சீறிடுவர் மக்கள்! மக்கள் மயக்கந் தெளிந்திட, மத்திய சர்க்காரின் இந்த திடீர் குறைப்பு, நிறுத்தலும் உதவும்!

காங்கிரசின் பகற் கனவு

திக்கெட்டும் வெற்றிக் கொடி நாட்டியவர்கள் நாங்கள்! யார் எதிர்த்து நின்றாலும் மண்ணைக் கவ் வும்படி செய்வோம்! தைரியமுள்ள வர்கள் வந்து பார்க்கட்டும்!

இந்த "பாணி" யில் பேசிக் கொண்டு சென்றார்கள் காங்கிரஸ் தேர்தல் பிரசாரகர்கள்—குறிப்பாக தி. மு. க. தோழர்களைச் சுட்டிக் காட்டி!! தேர்தல் களங்கள் தின வெடுக்கிறதென்றார்கள். எதிர்ப் போர் இல்லாமையால்! காங்கிரசை எதிர்ப்பவர் எவரும், வெற்றி பெற லாம் எனக் கனவுகூடக் காணமுடி யாதென, அச்சுறுத்தினர்!

இந்த வார்த்தைகள் இன்னும் காதுகளில் ஒலித்துக்கொண்டுதா னிருக்கின்றன — அவற்றின் ஓசை அலைகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. அதற்குள்ளாகவே மறுப்பு—கடுமை யான கண்டனம்—காங்கிரஸ் சுவா லுக்குக் கோளம் தரும் பதில். "மாந்தருள் மாணிக்கம்" தனது திக் விஜயத்தின் முக்கிய பகுதியா கக் கருதிய கேரளம், காங்கிரசிற்கு விடை தந்திருக்கிறது—அதன் எதி ரொலி இந்திய உபகண்டம் முழு தும் கேட்கிறது. நூற்றுக்கு அறு பத்திரண்டு பேர் காங்கிரசிற்கு எதி ராக ஓட் செய்தனர்! இம்முடிவு நாம் எதிர்பார்த்ததுதான்—ஆனால், அடிவயிற்றில் இடி விழுந்ததுபோல் துடிக்கிறார்கள் ஆளவந்தார்கள். நாலரை ஆண்டுகளாக ஏகபோக மாக அனுபவித்துவந்த கோலாகல வாழ்வு கையைவிட்டு நழுவுகிறதே யெனக் கலங்குகிறார்கள்.

கலங்கும்பொழுதே, அவர்க ளுக்கே உரித்தான கயமைத்தனத் தையும் துணைக்கு அழைத்துக் கொள்ளுகின்றனர். ஜனநாயகப், பாராளுமன்ற முறையைப் பற்றிப் புதிய வியாக்யானங்கள் கூற ஆரம் பித்துவிட்டனர்! தேர்தலில் தோற் றாலும் தாங்களே மந்திரி சபை அமைக்கவேண்டுமென்ற எண்ணத் தைத் தந்திரமான முறையில், வாழைப் பழத்திற்குள் ஊசியைச் செலுத்துவதுபோல், மக்கள் மன திற்குள் நுழைக்க ஆரம்பித்துள்ள னர்! காங்கிரசுக்கு ஏகபோக மெஜா ரிட்டி இல்லாது போனாலும் கட்சிக ளுக்குள்ளே தனிப்பட்ட முறையில் அதிக ஸ்தானங்களை அடைந்துள் ளது என்பதற்காக, காங்கிரஸ்தான் மந்திரிசபை அமைக்கத்தகுதிவாய்ந் தது, என ஒரு பத்திரிகை எழுத ஆரம்பித்துவிட்டது!

இந்த யோசனையைக் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால், இதிலுள்ள நச்சுப் பற்களை நாம் காணலாம். ஜன நாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்கு ஆளவந்தார்கள் ஆயத்தம் செய்கின்றனர் என்பது தெரியவரும்.

ஜனநாயக முறைப்படி, ஏகபோக மெஜாரிட்டி உள்ள கட்சிக்கு மந் திரி சபை அமைக்க உரிமையுண்டு. இவ்விதமான மெஜாரிட்டி இல்லை யானால், மொத்த எண்ணிக்கையில் மெஜாரிட்டி கிடைக்கும் வகையில், இரண்டு அல்லது அதற்குமேற் பட்ட கட்சிகள் ஒன்றுசேர்ந்து கூட்டு மந்திரி சபை (composite cabinet) அமைக்கலாம். அதாவது, மந்திரி சபையின் திட்டங்களை அனுமதிக்கவும் ஆதரிக்கவும் சட்ட சபையில் மெஜாரிட்டி கட்டாயம் வேண்டும். இந்த மெஜாரிட்டி கொஞ்சம் பலமுள்ளதாகவும் இருத் தல் வேண்டும். அதாவது, கட்சி களின் கூட்டமைப்பு கொஞ்சம் காற்றடித்தால் பிரிந்து விடுவதா கவோ, 'நித்யகண்டம் பூர்ணாயிசு' என்ற முறையிலோ, இருக்கக் கூடாது. ஸ்திரமான கூட்டமைப்பு வேண்டுமானால், ஏதேச்சாதிகாரப் போக்கு ஒழிய வேண்டும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வளர வேண்டும்.

ஆனால் சரிந்து கொண்டிருக்கும் காங்கிரஸ் அவ்வாறு செய்ய முன் வருமென்று தோன்றவில்லை. சொந்தமாகத் தனக்கு ஏகபோக மெஜாரிட்டி கிடையாது, மற்ற கட்சிகளுடன் சேர்ந்து மெஜாரிட்டி ஏற்படுத்திக்கொள்வதிலும் இஷ்ட மில்லை. ஆனாலும் நாங்கள்தான் ஆட்சி புரிவோம்—கவர்னர் பெரு மானின் அனுக்ரஹத்தால் — இவ் வாறு கூற ஆரம்பித்துவிட்டனர் காங்கிரஸ் காவலாளர்கள்!

இந்த யோசனையை இன்னும் காங்கிரஸ் தலைவர்கள் நேரடியான முறையில்—கட்சி ரீதியில் கூற வில்லை—ஆனால், வழக்கம்போல்— பைலட் என்ஜினை அனுப்பிப் பாதை சரியாயிருக்கிறதா என அறிந்து வரச் செய்வதுபோல்—ஒரு காங்கி ரஸ் ஏடுமூலம் இந்தச் சதி, தலையை நீட்ட ஆரம்பித்திருக்கிறது!

முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்—நச்சு விதைகளிருந்து தோன்றியதாகையால்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

மாட்டுப்பெட்டி மற்றொரு கூட்டம்

காங்கிரஸ் பிரசாரக் கூட்டம், ஜுனாகாத்தில் நடந்ததாம். சுதந்திரத்தை நேரடியாகக் கொண்டுவந்த சுதந்திர சீலர்கள் பேசிக்கொண்டேயிருந்தார்களாம். திடீரென கற்கள் வந்து விழுந்தனவாம். சொற்கள் வீசும் இடத்தில் கற்கள் வீசும் கற்காலபழக்கம், இன்னமும் போகவில்லை. இருந்தாலும், அவர்கள் கற்களை வீசுகிற அளவு, நமதுசர்க்கார் பொதுமக்களுக்குத் தொண்டுசெய்திருக்கிறார்கள், என்பது கற்பாறை போன்ற உண்மை! சௌராஷ்டிர முதன் மந்திரி தேஹர் பேச எழுந்தார். உடனே மக்களிடையே கூச்சல்—குழப்பம் எல்லாம் ஏற்பட்டு விட்டதாம்! அப்பாடா, காங்கிரசுக்கு எவ்வளவு ஆதரவு — அந்த ஆதரவை அடக்க முடியாமல், தேர்தல்வந்து, பெட்டியைத் தேடிப் போகிற நாள்வரை பொறுத்திருக்க முடியாமல், அப்பொழுதே காட்டிவிட்டார்கள்போலிருக்கிறது! மந்திரியார் பேசவே முடியவில்லையாம். அதுபோலவே ராஜ்கோட்டிலும் பேசவிடவில்லை, அந்தப் பெரிய மனிதர்களை! மாட்டுப் பெட்டிக்கு அமோகமான ஆதரவு இருக்கிறது என்பதற்கு இதைவிடவா அத்தாட்சி வேண்டும்!

ராமாயணம் புதிய வெளியீடு

காங்கிரஸ் பிரசாரகர்: இந்த நாட்டையாள, காங்கிரஸ் மகாசபைக்குத்தான் உரிமையுண்டு.

கிராம தோழன்:- ஏன்?

கா. பி:- காங்கிரஸ்தான் இந்தியாவிற்கு படாதபாடுபட்டு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது.

கி. தோ:- அதனால்?

கா. பி:- காங்கிரஸ் தான் ஆள வேண்டும்.

கி. தோ:- ஏனய்யா, காங்கிரஸ் பிரசாரகரே, உம்மைத்தான் கேட்கிறேன். உங்க ராம ராஜ்ய நியாய வாதமா இது? தவறிப்போனாள் சீதை, ராமனுக்காகத் தேடிப்போனான் அனுமான். படாதபாடு பட்டு கொண்டுவந்து சேர்த்தான் சீதையை. சீதையைக்கொண்டுவந்ததற்காகவே, அனுமான் சீதையிடம் சொந்தம் கொண்டாடினான் என்றால், எந்த ராமாயணத்திற்கு அடுக்கும்! ராமனுக்காக சீதையைத் தேடிப்போனான் அனுமான்—எங்களுக்காக, சுதந்திரதேவியை, வெள்ளைக்காரர்களிடம் வாங்கிட போரிட்டீர்கள் — எங்களிடம் சுதந்திர சீதையை, ஒப்படைக்காமல்...... இது என்னய்யா, புதுராமாயணமாயிருக்கு!

கா. பி:- (திரு திருவென விழித்த படி) ஏப்பா, நீ இந்த திராவிட.....

கி. தோ:- திராவிடக் கட்சியிலே சேர்ந்திருந்தால்தான் இப்படிப் பேசுவாங்க என்கிறீர். இப்படிப் பேசுகிறவங்க எல்லாம் திராவிடக் கட்சியென்றால், இந்த நாடே, திராவிடக்கட்சிதான்.

கா. பி:- சரி, நான் வர்றேன் — அனுமந்தபுரத்தில் கூட்டம்—அவசரம்!

★

காங்கிரசில் புதிய தியாகிக

பிரிட்டிஷ் ஏஜண்ட் காங்கிரஸ் பிரதிநி

கிருஷ்ணமாச்சாரி யார்?

ஐயோ, காங்கிரசே, உனக்கா இந்த கதி?

காங்கிரசின் போக்கு வரவர எவ்வளவு கேவலமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கு ஆயிரக்கணக்கான அத்தாட்சிகள், இந்த தேர்தல நேரத்தில நம் முன்னால் காட்சியளிக்கின்றன. அவைகளையும் சகித்துக் கொண்டு, இன்னமும் காங்கிரசில் சிலர் இருக்கிறார்களே எனனும்போது அழுவதா, சிரிப்பதா என்று நமக்குத் தெரியவில்லை.

காங்கிரசின் பெயரால், சட்ட சபைக்கும் பார்லிமெண்டிற்கும் நிறுத்தப்பட்டிருக்கும் அபேட்சகர்களின் பட்டியலைப் பார்த்தால், 'ஐயோ, காங்கிரசே, உனக்கா இந்த கதி?' யென்று கூறிடத் தோன்றுகிறது.

காங்கிரசின் பெயரால் நிற்பவர்களில் எத்தனை பண மூட்டைகள், சமூக விரோதிகள் என்று அவர்களாலேயே கூறப்பட்ட எத்தனையோ கொள்ளை லாபக்காரர்கள்!

அதுமட்டுமா, யார் யார் காங்கிரசைத் திட்டினார்களோ, அவர்களில் பலரைக் கூட, நிறுத்தியிருக்கிறது, காங்கிரஸ், அவர்களிடம் பணம் இருக்கிறது என்ற ஒரு காரணத்திற்காக!

உண்மைத்தியாகிகள், சுதந்திரத்திற்காக தங்களையே தத்தம் செய்தோர் எவரையுமே காணோம்.

சென்னையில் பார்லிமெண்டுக்கு காங்கிரஸ் சார்பில் நிற்பவர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி — இவர் எந்தத் தியாகம் செய்தார்? சத்தியாக்கிரகம் செய்தாரா? அடிபட்டாரா? சிறைபட்டாரா? அவரைநிறுத்தியிருக்கிறார்க
கிருஷ்ணமாச்சாரியார்
றைக்கு தியாகியாகி விட்டார். இ
'தியாகி' என்ன செய்தார்
யுமோ? காங்கிரஸ், பிரிட்
சரக்குகளை பகிஷ்கரியுங்கள் எ
பெரும் போர் நடத்தியபோ
இந்த 'தியாகி', ஏராளமான பி
டிஷ் சாமான்கள் விற்க பெரி
பாடுபட்டார். லிவர் பிரதாஸ்
பெனியாரின் விற்பனைப் பெ
கத்திற்கு, இந்த புதுத் தியாகி
உழைப்புதானே காரணம் — ல
டாய்லட் சோப். இங்கு பெரு
அளவில் விற்பனையாக, அ
லவோ காரணம்!

பிரிட்டிஷ் ஏஜண்டாக இரு
கிருஷ்ணமாச்சாரியார் இன்று கா
கிரசின் சார்பிலே பார்லிமெ
டுக்கு நிற்கிறார். காங்கிரஸின் பகி
காரத் திட்டத்திற்கு பரம வை
யாக இருந்த அதே பிரிட்டி
கையாள் இன்று எப்படியோ, கா
கிரஸ் தியாகிகள் பட்டியலி
இடம் பெற்று, தேர்தலில்கூட
கிறார். மானமும், மதியும் உ
காங்கிரஸ் கண்ணியர்கள் இத
எப்படித்தான் சகித்துக் கொ
றார்களோ?

அவரை எதிர்த்துதான், ந
ஒப்பந்தத்தில் கையெழுத்திட்
பி. பாலசுப்ரமணியம் நிற்கிறா
அவர் வெற்றிபெற வேண்டும். கா
கிரசின் பித்தலாட்டம் மண்ணை
கவ்வ வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆதரவுபெற்ற அபேட்சகர்களுக்கு உங்கள் வாக்குரிமைகளை வழங்குங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சக்தி வளர்ந்து வருகிறது. அதன் ஆதரவு கிடைத்தால் சட்டசபை போகலாம், பார்லிமெண்டுக்கு ஏகலாம் என்று எண்ணி பலபேர், நாம் வெளியிட்ட ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பமிட்டார்கள். கையொப்பமிட்டவர்கள் அனைவரையுமே நாம் எடுத்துவிடவில்லை. நம் உரைகல்லில் உரைத்துப் பார்த்தோம். பிறகு ஒரு சிலரையே தெரிந்தெடுத்தோம்.

அவர்கள் மக்கள் பணிசெய்ய முன்வந்தவர்கள் மக்களுக்காகத் தாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்பதை எடுத்துக்காட்டி, மக்களின் நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் பெறுவது நிச்சயம். அத்துடன், நாம் பிறந்த திராவிடத்தை நமக்காக்கும் அறப்பணியில் முன்நின்று பணியாற்றுவேன் என்று உறுதிமொழி தந்திருக்கிறார்கள், ஆகவே நம் ஆதரவு கிடைக்கிறது. நம் பின்னால் நிற்கும் மக்கள் சக்தியின் துணையும் கிடைக்கிறது.

அவர்களின் தொண்டிலே மக்களுக்கு ஏற்படுகிற நம்பிக்கையும், தாயகமாம் திராவிடப் பிரிவினைபோரில் ஈடுபடுகிறேன் என்பதால், நாம் அளிக்கும் ஆதரவும் இணைந்து வெற்றிக்கு வழிவகுக்கும்—இது உறுதி!

திராவிட முன்னேற்றக் கழகம், மீண்டும் காங்கிரஸ் பாசிசம் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதிலே மிகவும் ஆதிக்க அக்கறை காட்டுகிறது. காங்கிரஸ்மீண்டும் முடிசூட விடக்கூடாது, முறியடிக்கப்பட வேண்டும் என்ற நோககத்தோடு தேர்தலில் தன் கண்ணோட்டத்தைச் செலுத்திற்று. தான் தேர்தலில் கலநது கொள்ளாவிட்டாலும் திராவிடத்தின் இலட்சியகீதத்தை முழங்கிடும் தோழர்களின் முன்னால் புறமுதுகுகாட்டி ஓட்டவேண்டும் காங்கிரசை, என்ற நோக்கத்தில்பிறந்ததுதான் மதுரை தீர்மானம்.

அதன்படி திராவிட முன்னேற்றக் கழகம், பல தோழர்களை ஆதரிக்கிறது. நிற்கும் அபேட்சகர்களும் திறம்பட வேலை செய்கிறார்கள். ஆங்காங்குள்ள கழகக் காளைகள், நம் இலட்சிய முரசு கொட்டுவதாக உறுதிமொழிதந்துள்ள தோழர்களுக்கு உழைக்கவேண்டும்.

அவர்களின் வெற்றி—நமது இலட்சியத்தின் வெற்றி! அவர்கள் சட்ட சபைக்கு செல்வது, பார்லிமெண்டுக்கு போவது என்பது, நாம் நம் திராவிட நாட்டுப் பிரிவினை பிரச்சினையை அனுப்பிவைக்கிறோம் என்று அர்த்தம்.

திராவிடத் தோழர்களே, நம் ஆதரவினைப்பெற்ற அபேட்சகர்களுக்கு வெற்றி பெறப் பாடுபடுங்கள்.

மாட்டுப் பெட்டியில்மட்டும் மறந்தும் உங்கள் ஓட்டுகளைப் போடாதீர்கள்!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.